கோவிட்-19 தடுப்பூசி

# உண்மைகளைப் பெறுங்கள்.

இப்போது 12+ வயதினருக்குக் கிடைக்கிறது

உங்கள் பிள்ளையைப் பாதுகாருங்கள்.

உங்கள் சமூகத்தைப் பாதுகாருங்கள்.

## சிறாரும் இளைஞரும் தடுப்பூசி பெற்றிருக்கும் போது ஆகவும் பாதுகாப்படைவர்.

தடுப்பூசி சிறாரும் இளைஞரும் உட்பட யாவரையும் கோவிட்-19 ஏற்படாமல் பாதுகாக்கிறது. தடுப்பூசி சிறாரும் இளைஞரும் நோயுறும் போது அவர்கள் கடுமையாக நோயுறாமலும் தடுக்கிறது.

மிக எளிதாகப் பரவுவதுடன் இன்னும் கடுமையான நோயறிகுறிகளை ஏற்படுத்தக்கூடிய டெல்டா திரிபு உட்பட மிகவும் புதிய கோவிட்-19 திரிபுகள் காணப்படுகின்றன. தடுப்பூசிகள் டெல்டா போன்ற திரிபுகளுக்கு எதிராகப் பாதுகாக்கின்றன.



## சிறாருக்கும் இளைஞருக்கும் தடுப்பூசி ஏற்றுவது முழுச் சமூகத்தையும் பாதுகாக்கிறது.

ஒருவர் தடுப்பூசி ஏற்றப்பட்டதும், அவரிடமிருந்து ஏனையோருக்குக் கோவிட்-19 பரவுவது இன்னும் கடினமாகிறது. தகுதி வாய்ந்த சிறுவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டதும், அது பாதுாப்பது:

- இன்னமும் தடுப்பூசி ஏற்றப்பட்டிராத அவர்களின் நண்பர்களையும் குடும்பத்தையும்.
- முதியோரையும் கோவிட்-19 இனாற் கடுமையாக நோயுறக்கூடிய உயர் இடர்ப்பாட்டிலுள்ள சிற்சில மருத்துவ நிலைமைகளைக் கொண்டோரையும்.

சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்படுவது அதிகரிக்கும் போது, பாடசாலைகளையும் வணிகங்களையும் திறந்து வைத்திருப்பது இன்னும் எளிதாகிறது.

## பாதுகாப்பானவையும் பலனுள்ளவையும்

- ஐக்கிய அமெரிக்க வரலாற்றில் வேறு எத்தடுப்பூசியும் அதன் பாதுகாப்புத் தொடர்பில் இந்தளவு சோதிக்கப்பட்டதில்லை.
- தடுப்பூசி வெவ்வேறு வண்ணங்கள், இனங்கள், வயதுகள் என்பவற்றைச் சேர்ந்தோர் உட்பட சிறாருக்கும் இளைஞருக்கும் பெரியோருக்கும் பாதுகாப்பானதென எண்பிக்கப்பட்டுள்ளது.
- தடுப்பூசிகள் உங்கள் பிள்ளைக்கு எதிர்காலத்தில் பிள்ளைப் பேற்றை இல்லாமலாக்கும் என்பதற்கான சான்று எதுவும் கிடையாது.

## யாவருக்கும் இலவசம்

- **குடிவரவு நிலை** யாதாயிருப்பினும் நீங்களும் உங்கள் பிள்ளையும் ஒரு இலவசத் தடுப்பூசியைப் பெறலாம்.
- ஒரு இலவசத் தடுப்பூசியைப் பெற நீங்களோ உங்களது பிள்ளையோ **ஒரு அடையாள அட்டையைக் காட்ட** அல்லது **மருத்துவ காப்பீட்டை கொண்டிருக்க** வேண்டியதில்லை.

NRC-RIM
National Resource Center for Refugees, Immigrants, and Migrants

**இன்னும் தகவல்களுக்கு: cdc.gov/coronavirus**

# எதை எதிர்பார்க்கலாம்

உங்கள் பிள்ளைக்கு கோவிட்-19 இற்கு எதிராகத் தடுப்பூசி ஏற்றப்பட்டதும், அவர் பாடசாலைக்குச் செல்லல், விளையாட்டுகளை விளையாடுதல், நண்பர்களையும் குடும்பத்தையும் சந்தித்தல் என்பன போன்ற சாதாரணச் செயற்பாடுகளுக்குப் பாதுகாப்பாகத் திரும்பலாம்.



**சந்திப்பின் போது:**

- தாதியோ மருத்துவரோ உங்களது பிள்ளைக்குத் தடுப்பூசி வழங்க முன்னர், அவர் உங்களுக்கு அதைப் பற்றிக் கூறுவார், உங்களது பிள்ளையின் மருத்துவ வரலாற்றை மீளாய்வு செய்வார், உங்களிடம் ஏதேனும் கேள்வி இருக்கிறதா என்று உங்களிடம் கேட்பார்.
- உங்களது பிள்ளைக்கு ஒவ்வாமை இல்லை என்பதை உறுதி செய்ய, அவர் 15–30 நிமிடங்கள் காத்திருக்க வேண்டியேற்படும்.



## மிதமான பக்க விளைவுகள் சாதாரணமானவை

பக்க விளைவுகள் என்றால் உங்களது பிள்ளைக்கு கோவிட்-19 உள்ளதென்று பொருளல்ல.

பக்க விளைவுகள் தடுப்பூசி உங்களது பிள்ளையின் உடலுக்கு கோவிட்-19 இற்கு எதிராக எப்படிப் போராடுவதென்று கற்பிக்கிறது.

மிதமான பக்க விளைவுகளில் உள்ளடங்கக் கூடியன:

- ☐ தடுப்பூசி வழங்கப்பட்ட இடத்தில் கையில் வலி அல்லது வீக்கம்
- ☐ களைப்பு
- ☐ தலைவலி
- ☐ தசை வலி
- ☐ குளிர் காய்ச்சல்
- ☐ காய்ச்சல்
- ☐ குமட்டல்

## கடுமையான பக்க விளைவுகள் மிக அரிதானவை

**தடுப்பூசிகள் பாதுகாப்பானவை. உங்களது பிள்ளைக்கு ஒரு தடுப்பூசியினால் ஏற்படுவதை விட ஒரு கோவிட்-19 தொற்றினால் கடுமையான சுகவீனம் ஏற்படும் சாத்தியம் அதிகம்.**

சில இளம் ஆட்கள் (இதயத்தசை அழற்சி அல்லது இதயவுறை அழற்சி எனப்படும்) இதய அழற்சி அல்லது குருதி உறைதல் போன்ற பக்க விளைவுகளை அனுபவித்துள்ளனர்.

- கடுமையான பக்க விளைவுகள் **ஆகவும் அரிதானவை**
- கடுமையான பக்க விளைவுகள் **சிகிச்சை செய்யப்படக்கூடியவை**, அவையுள்ள பெரும்பாலானோருக்கு அவை குணமடைந்துள்ளன
- தடுப்பூசியின் நன்மை அதிலிருந்து ஏற்படக்கூடிய எந்த இடர்ப்பாட்டை விடவும் மிகவும் பயனுள்ளது

## மேலும் தகவல்களுக்காக உங்களது மருத்துவரிடம் கேளுங்கள்

கோவிட்-19 தடுப்பூசிகளையும் உங்களது பிள்ளைக்குத் தேவைப்படக்கூடிய ஏனைய தடுப்பூசிகளையும் பற்றி மேலும் அறிய உங்களது மருத்துவரிடமோ தாதியிடமோ உரையாடுங்கள்.

NRC-RIM
National Resource Center for Refugees, Immigrants, and Migrants

**இன்னும் தகவல்களுக்கு: cdc.gov/coronavirus**